e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




## காயத்ரி மந்திரத்தின் 24 தத்துவங்களை உணர்த்தும்

# காஞ்சி அத்திவரதர்



## துளசியை பின் தொடரும் விஷ்ணு

வீட்டில் பூஜை செய்து முடித்ததும் துளசியை கையில் வைத்துக் கொண்டு என் பக்தன் எங்கு சென்றாலும் நான் அவனைப் பின் தொடர்ந்து செல்வேன் என பகவான் கூறியுள்ளார். அதனால் ஒருவர் கையில் துளசி இருக்கும் வரை விஷ்ணுவின் துணை அவருக்கு உண்டு.



## லட்சுமி வாசம் செய்யும் வலம்புரிச் சங்கு

வலம்புரிச் சங்கு வைத்திருக்கும் வீட்டில் வற்றாத செல்வம் வந்து சேரும். வலம்புரிச் சங்கிலே மகாலட்சுமி வாசம் செய்கிறாள். இதனால்வலம்புரிச் சங்கு இருக்கும் வீட்டில் மகாலட்சுமி தங்க விரும்புவாள்.

## செய்ய வேண்டியதும் செய்யக்கூடாததும்

❖ தனது வீட்டில் கோலம் போடாமலும் விளக்கேற்றாமலும் ஆலயங்களுக்கு செல்லக்கூடாது.

❖ எரியும் விளக்கில் எண்ணெய் அல்லது நெய்யை கையால் தொடுவதும் அதைத் தன் தலையில் தடவிக் கொள்வதும் கூடாது.

# 12 ஜோதிர் லிங்கங்களின் அமைவிடமும் சிறப்புகளும்

பன்னிரெண்டு ஜோதிர் லிங்கங்கள் அமைந்துள்ள இடங்களைப் பார்ப்போம்.

**மஹாராஷ்ட்டிராவில்**

ஐந்து ஜோதிர் லிங்கங்கள் உள்ளன.

1. பீமாசங்கரம்,
2. பரலி வைத்யநாத்,
3. அவுண்டா நாகநாத்,
4. குஷ்மேசம்,
5. நாஸிக்திரியம்பகேஸ்வரர்

**மத்யபிரதேசத்தில்**

இரண்டு ஜோதிர் லிங்கங்கள் உள்ளன.

1. உஜ்ஜயினி மகாகாளரும்,
2. ஓம்காரம் மமலேஸ்வரர்

**ஹிமாசலபிரதேசத்தில்**

ஒரு ஜோதிர் லிங்கம் உள்ளது.

1. கேதாரேஸ்வரர்

**குஜராத்தில்**

ஒரு ஜோதிர் லிங்கம் உள்ளது.

1. சோமநாதரும்

**ஆந்திரபிரதேசத்தில்**

ஒரு ஜோதிர் லிங்கம் உள்ளது.

1. ஸ்ரீசைலத்தில் மல்லிகார்ஜுனர்

**தமிழ்நாட்டில்**

ஒரு ஜோதிர் லிங்கம் உள்ளது.

1. ராமேஸ்வரத்தில் ராமநாதர்

**உத்திரபிரதேசத்தில்**

ஒரு ஜோதிர் லிங்கம் உள்ளது.

1. வாரணாசியில் விஸ்வேஸ்வரம்.

### ஜோதிர் லிங்கங்களின் சிறப்புகள்

நாஸிக்திரியம்பகேஸ்வரர், பிரும்மா, விஷ்ணு, சிவ ஸ்வரூபங்களை உடையவர்.

பீமாசங்கரம்பீமேஸ்வரர் சிவசக்தி ஸ்வரூபமாக அர்த்த நாரீஸ்வரராக உள்ளார். சிவலிங்கம் மேல் இரண்டு பகுதியாக பிரிந்தது போல் நடுவில் பள்ளமாக இருக்கும்.

ராமேஸ்வரம் ராமநாதனை பக்தர்கள் யாரும் தொட்டு கும்பிட முடியாது.

திரியம்பகம்திரியம்பகேஸ்வரரை ஆண்கள் மட்டும் தொட்டு பூஜை செய்யலாம்.

மீதமுள்ள பத்து ஜோதிர் லிங்கங்களையும் ஆண், பெண் இருபாலரும் தொட்டு பூஜை செய்து வழிபடலாம்.

ராமேஸ்வரம், ஸ்ரீசைலம், கேதார்தாத் போன்ற தலங்களில் அருளும் சிவபெருமான்கள் மூவரும் பாடல் பெற்றவர்கள்.



## பெரிய தேர்கள் உள்ள ஸ்தலங்கள்

திருவாரூர், திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுதூர், திருவண்ணாமலை, சிதம்பரம், காஞ்சி, மதுரை.

## முக்தி ஸ்தலங்கள்

1. காசி, 2.காஞ்சி, 3.மதுராபுரி, 4.அரித்துவார், 5.உஜ்ஜையினி, 6.அயோத்தி 7.துவாரகை.



❖ அமாவாசை அன்று நமது வீட்டில் தான் சாப்பிடவேண்டும். முடிந்தால் அன்று நாம் சாப்பாடு அடுத்தவருக்கு போடவேண்டும்.

❖ காயத்ரி மந்திரத்தை பிரயாணத்தின் போது, சொல்லுதல்கூடாது சுத்தமான இடத்தில்தான் ஜபிக்கவேண்டும்.



## பிதுர்கடன் கொடுக்க சிறப்பு ஸ்தலம்

காசி, கயா – விஷ்னுபாதம் ஆலமரம்

திருவெண்காடு – ஆலமரத்தடி ருத்ரபாதம்

பத்ரிநாத், திருக்கோகர்ணம், பவானி, திலதர்ப்பணபுரி, செதிலப்பதி,

தசரதன் மற்றும் ஜடாயுக்கு, இராமன் லட்சுமனன் தர்ப்பணம் செய்த தலம்.

இராமேஸ்வரம், துவாரகாபுரி, பூம்புகார், இடும்பாவனம், சங்குமுகேஸ்வரர்.

# தர்ப்பையின் மகத்துவம்



இந்துமதச் சடங்குகளில் இறைனை அடைய பல்வேறு வழிமுறைகளை மேற்கொள்ளும்போது, அவற்றிற்கு ஒருசில பொருட்களைப் பயன்படுத்துவது நன்மை அளிக்கும்.

இதை உணர்ந்த நம் முன்னோர்கள், சக்தி வாய்ந்த பல பொருட்களை கண்டறிந்து, அவற்றை இறை பூஜையுடன் தொடர்பு படுத்தி அதற்கான கார ணத்தையும் கூறியுள்ளனர். இந்த வகையில் தர்ப்பைபுல், துளசி வில்வ இலை போன்ற ஒரு சில பொருட்கள் மிக அபரிமிதமான பலனைத் தரும். துளசி, தர்ப்பை, வில்வம் உள்ள இடங்களில் மிகவும் பவித்திரம் வாய்ந்ததாகவும் கூறியுள்ளனர்.

இவற்றில் தர்ப்பையைப் பற்றி சிறிய அளவில் பார்ப்போம். ஒரே ஒரு தர்ப்பை புல்லுக்கு இருக்கும் சக்தி.

தர்ப்பை உஷ்ண வீரியம் உள்ளது. நீரை தூய்மைப்படுத்தக்கூடியது. விஷத்தை முறிக்க வல்லது. இதனால் தான் கிரஹண காலங்களில் பரவும் நச்சுத்தன்மையினை நீக்க உப்புக் கலந்த உணவுப் பொருட்களில் தர்ப்பையை போட்டு வைப்பார்கள்.

கும்பாபிஷேகத்தின் போது யாக சாலையில் உள்ள கும்பத்தின் ஆற்றலை பிம்பத்தில் ஒடுக்கும் கிரியையில் தங்கம், வெள்ளி கம்பிகளுடன் முக்கியமாக தர்ப்பைக் கயிற்றைப் பயன்படுத்துவர்.

தர்ப்பையில் **ஆண் தர்ப்பை, பெண் தர்ப்பை, அலி தர்ப்பை** என மூன்று வகை உண்டு.

**ஆண்தர்ப்பை** அடி முதல் முடி வரை சமமாக உடையது.

**பெண் தர்ப்பை** மேலே தடித்துக் காணப்படுவது பெண் தர்ப்பை,

**அலிதர்ப்பை** அடியில் தடித்துக் காணப்படுவது அலிதர்ப்பை.

**தர்ப்பையின் அடியில் பிரம்மனும்,**

**நடுவில் திருமாலும்,**

**நுனியில் சிவனும் வாசம் செய்கின்றனர்.**

தேவர்களை நினைத்துச் செய்யும் தர்ப்பணத்தில் தர்ப்பையின் நுனியாலும், மனிதர்களை நினைத்துச் செய்யும் தர்ப்பணத்தில் தர்ப்பையின் நடுவாலும், பிதுர்க்களை நினைத்துச் செய்யும் பொழுது தர்ப்பையினை மடித்து நுனியாலும் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

வைதீகச் சடங்கின் போது பவித்திரம் என்ற தர்ப்பையிலான மோதிரத்தை வலதுகை மோதிர விரலில் அணிந்து கொண்டே கர்மத்தைத் தொடங்க வேண்டும். இவ்விரலில் சுபநாடி ஓடுவதால் அதில் தர்ப்பையை அணியும்போது கபசுத்தி ஏற்படுகிறது.

ஜபம், ஹோமம், தானம், தர்ப்பணம் அனைத்திலும் பவித்திரம் அணிவது அவசியம். மாவிலை, தர்ப்பை இரண்டுமே நல்ல அதிர்வுகளைக் கொண்டிருக்கின்றன.

யாகத்தைக் காப்பதற்கு வைக்கப்படும் யாகேஸ்வர தேவரின் கும்பத்திலுள்ள ஞானகட்கம் தர்ப்பையால் செய்து அமைக்கப்படும். திருநள்ளாறு தலத்தில் தலவிருட்சமே தர்ப்பையாகும்.

மேலும் தர்ப்பையை ஒரு சிறு பகுதியை வெளியே செல்லும் போது அல்லது இரவு பயணத்தின்போது கையிலோ, அல்லது சட்டைப் பையிலே வைத்திருந்தால் எந்த தீய சக்தியும் நெருங்காது.

இவ்வாறு பயன்படுத்திய தர்ப்பையை கால் மிதிபடாத இடத்தில் உள்ள மரம், செடி கொடி போன்றவற்றின் கீழே சிறு குழிதோண்டி புதைத்து விடுவது நன்மை தரும்.

யார் வேண்டுமானாலும் தர்ப்பையை பயன்படுத்தலாம். ஆண், பெண், குழந்தைகள், ஜாதி போன்ற எந்த பாகுபாடும் கிடையாது. பயன்படுத்தும்போது, எந்த தீய செயல்களும், தீய எண் ணங்களும் இல்லாமல் இருந் தால் நல்ல பலன்களை தர்ப்பை நிச்சயம் தரும்.





அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# 1967-குப் பின் மிகப்பெரிய வர்த்தக நிறுவனமாக மாற்றப்பட்ட இந்துக் கோயில்கள்



கோவில் என்பது மனதிற்கு அமைதியையும், புத்துணர்ச்சியையும், தெளிவையும், ஆரோக்கியத்தையும் தரும் ஒரு இடமாக அக்காலத்தில் இருந்தது.

ஆனால் தற்போது மிகப்பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்சைப் போன்று மாறி காட்சியளிக்கிறது இன்றைக்கு. இதற்கு காரணம் என்பதை சற்று ஆராய்ந்தால் இந்து மதத்தினரின் அலட்சியமே காரணம் என்று எளிதாக சொல்லிவிடலாம்.

எவ்வாறு கோயில்கள் சிதைக்கப்படுகிறது, இந்த முறை எப்போது ஆரம்பித்தது என்பதை எளிதாக பார்ப்போம்.

1967ஆம் ஆண்டுகளுக்கு முன்பு கோவிலில் தேவாரம், திருவாசகம் படித்து வந்த ஓதுவார்கள் படிப்படியாக பணி நீக்கம் செய்யப்பட்டனர். இதனால் கோவிலில் ஒலித்து வந்த தேவாரம் திருவாசகம் மெல்ல நிறுத்தப்பட்டது.

இதன்பின் கோவில் சொத்துக்களை பாதுகாத்துவந்த மணியக்காரர்கள் என்ற முறை மெல்ல அழிக்கப்பட்டது. இந்த மணியக்காரர்களின் பணி கோவிலுக்கு சொந்தமான நிலம் சொத்து மற்றும் கால்நடைகளை துல்லியமாக அறிந்து வைத்திருந்தனர். முக்கியமாக கணக்கபிள்ளை, பிராமணர், கொங்குவேளாள கவுண்டர், முதலியார் உள்ளிட்ட நபர்கள் நடமாடும் கணினிகளைப் போன்று கோவில் நிலங்கள், தானம் பெறப்பட்ட நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் அதில் உள்ள மரங்கள், விளைச்சல் வருவாய் குறித்த எல்லாம் அத்துபடியாக ஞாபகத்தில் வைத்திருந்தனர். தங்களுக்குப் பின் தங்களது வாரிசுகளுக்கு கோவிலின் சொத்துக்களைப் பற்றி சொல்லிக் கொடுத்தனர். இதனால் கோவில் சொத்துக்களை பரம்பரை பரம்பரையாக அவர்கள் கட்டிக் காத்து வந்தனர்.

கோவில் நிலங்களையும், சொத்துக்களையும் கொள்ளையடிக்க துடித்த கூட்டத்திற்கு இந்த மணியக்காரர்கள் மிகப்பெரிய தடைக் கல்லாக இருந்தனர். இதனால் 1967க்குப் பின் வந்த அதிகார அரசால் இந்த முறை மாற்றப்பட்டது. சுத்தமாக மணியக்காரர்கள் ஒவ்வொரு பகுதியாக நீக்கப்பட்டனர். இந்த மணியக்காரர்களை விரட்டினால் தானே நிலத்தை பட்டா போட முடியும்.

கோவில் திருவிழா போன்றவற்றில் சரியான முன்னேற்பாடுகள் செய்யாதது, பாதுகாப்பு கொடுக்காதது போன்றவை அரங்கேற்றப்பட்டது. இதனால் கோயிலில் கூட்டம் குறைக்கும் நடவடிக்கை அரங்கேறியது. இதில் ஒரு பகுதியாக எல்லோரும் அர்ச்சகர் ஆகவேண்டும் என்ற பிரச்சனையை கிளப்பி விட்டு, கோவில்களை ரணகளம் உண்டாகும் இடமாக மாற்றப்பட்டது. இதனால் கோவிலுக்கு வரும் கூட்டம் சற்று குறைய ஆரம்பித்தது.

**இந்து கோவில்களை மட்டும் அரசுடமைபடுத்தி இந்து சமய அறநிலயத்துறையை அரசு பணி என்ற பெயரில் இந்து மத நம்பிக்கை இல்லாத மாற்று மதத்தவர்கள், கடவுள் நம்பிக்கை அறவே இல்லாதவர்களை நியமித்து இந்து மதத்தை சீரழித்தது. இதன் மூலம் கோவில் வருமானத்தில் ஒருசில குறிப்பிட்ட அரசியல் வாதிகள், அரசுத்துறையினர் லாபம் அடைந்ததால், கோவிலுக்கும், சுவாமிக்கும் அவப்பெயரை உண்டுபண்ணியது.**

கோவில் சிறப்பு நுழைவு சீட்டு ஏன்று போட்டு பக்திக்கு உள்ள இடத்தை கேளிக்கை இடமாக மாற்றியது.

கோயில் ஆகம விதிமுறைகளுக்கு எதிராக கோயிலுக்கு உள்ளேயே கடைகள், விடுதிகள், கட்டணகழிப்பறைகளை ஏற்படுத்தி சுயநலவாதக் கூட்டம் காசுபார்க்க வழி ஏற்படுத்திக்கொடுத்தது.

இப்படி அமைதியை தேடி ஆன்மீக காரியங்களுக்காக பக்தர்கள் வரும் கோயில்களின் நிலைமாறி அவை வர்த்தக மையங்களாக மாற்றப்பட்டது.

1967-ஆம் ஆண்டு துவங்கிய இந்த சீரழிப்பு இன்று தமிழகத்தில் உள்ள கோவில்கள் அனைத்தும் வர்த்தக நிறுவனங்களாக மாற்றப்பட்டு பணம் கொழிக்கும் இடமாக திகழ்கிறது.









www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com





ஆன்மிகமலர் மெயில் புக்

# மிகப்பெரிய திருமணமண்டமாக மாறிய வடபழனி கோயில்

தற்போது தமிழகத்தில் உள்ள பல கோயில்களில் திருமணம் நடைபெற்று வருகிறது. ஆனால் திருமண நிகழ்ற்கு ஒருசில கோயில்களில் எந்த வித கட்டுப்பாடும் இல்லாததால், திருமணம் முடிந்ததும், கோவில் முழுவதும் குப்பை கூளமாக காட்சியளிக்கிறது.

இந்த வகையில், சுப முகூர்த்த நாட்களில், சென்னை வடபழனி கோயிலில் சன்னதியை சுற்றி நூற்றுக்கணக்கான திருமணங்கள் நடைபெறுவதால் கோவிலுக்கு செல்ல வயதானவர்கள், பெண்கள், குழந்தைகள் மிகுந்த சிரமம் அடைகின்றனர்.

இதில் ஒருபடி மேலே சென்று திருமண சமயத்தில், அருவருக்கத்தகையில் விசில் ஊதுவது, பிறந்த நாட்களில் பயன்படுத்தப்படும் வண்ணப்பொடி, வண்ணகாகிதங்களை தூவுதல் போன்றவை நிகழ்த்தப்படுகிறது.



சில சமயம் **கோவிலா அல்லது திருமண மண்டபமா** என்று எண்ணத்தோன்றுகிறது.

இறைவனை பார்க்க வரும் பக்தர்களுக்கு இது போன்ற செயல் மிகுந்த மன வருத்தத்தை அளிக்கிறது. தயவு செய்து கோவிலை கோவிலாக மதியுங்கள். கேளிக்கை கூடமாக மாற்றாதீர்கள் என்கின்றனர் பக்தர்கள்.

இதில் பாதிக்கப்படுவது உண்மையான பக்தர்களும் தொண்டர்களும்தான்.

ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கு எடுத்துக்காட்டுதான், காஞ்சி அத்திவரதர் விழா...

தினமும் 2 லட்சம் பேர் கூடும் கூட்டத்தில் ஏற்பட்ட விபத்தும், பக்தர்களை ஒழுங்குபடுத்த முடியாத அவல நிலையும், வி.ஐ.பி.க்களை விழுந்து விழுந்து உபசரித்து, அவர்கள் முன் புகைப்படத்திற்கு போஸ்கொடுத்து அத்திவரதரை கேளிக்கைப் பொருளாக மாற்றியதுதான் தற்போதைய உச்சக்கட்ட அவலம்.

இதில் கோவிலுக்கு வயதானவர்களும், குழந்தைகளும் வரவேண்டாம் என்று ஒரு மாவட்ட ஆட்சியரே பத்திரிகைகளில் விளம்பரம் செய்ததை சற்று யோசித்து பார்த்தால், கோவிலுக்கு சென்றால் உயிர் போகுமோ என்ற அச்சத்தை இந்து மக்களிடம் ஊட்டுவதாகவே அமைந்தது.

"2 லட்சம்பேரை சமாளிக்கமுடியாதா?" என்று உலகில் உள்ள இந்துக்கள் கேள்வி கேட்கும் அளவிற்கு இந்துக் கோயில்களின் நிலை தற்போது தள்ளாடிக் கொண்டிருக்கிறது.

மக்களின் மன அமைதிக்கும், பிரச்சனைகளும், கோவிலுக்கு சென்று இறைவனிடம் மனதார கூறி தெளிவு பெற்று வந்த பக்தர்களுக்கு, தற்போதைய நிலையில் கோவிலுக்கு சென்றால் மன உளைச்சலும், கோபமும் ஏற்படும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.






# இலவச இதழ்

ஆன்மிகமலர் மெயில் புக்



உங்களது மொபைல் போனில் படிக்க....

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
ஆன்மிகமலர் இ-புத்தகம் படிக்கலாம்.







# பிரம்மச்சாரிகளுக்கு அனுமதி கிடையாது எதிரி பிரச்சனைகளை தீர்த்து வைக்கும்

# மூகாம்பிகை

மூகன் எனும் கம்ஹாசூரன் கொல்லூர் மலைப்பகுதியில் தவம் இருந்து சக்திகளை பெற முயன்றான். இதை அறிந்த தேவர்கள் பயந்தனர்.

பிரம்மனிடம் வேண்டுகோள் விடுத்து சரஸ்வதி மூலம் அவனை ஊமையாக்கினார்கள். ஊமையன் என்பதை மூகன் என்றும் அழைத்தனர்.

மூகன் தனக்கு கிடைத்த சக்தியால் அட்டூழியம் செய்து வந்தான். தேவர்களும் முனிவர்களும் அந்த அசுரனால் பாதிக்கப்பட்டனர். அவர்கள் அம்பிகையிடம் முறையிட்டனர்.

மூகனை அழிக்க விஷ்ணு, சிவன், பிரம்மன், இந்திரன், முருகன், பூவராகன் ஆகிய 6 பேரும் உதவி செய்தனர்.

அதனால் அம்பிகை மூகனை அழித்தாள். அப்போது தன் ஆணவத்திற்கு வருந்தி மன்னிப்பு கோரினான்.

மேலும் அம்பாள் பெயருடன் தன் பெயரும் இணைந்து வழங்க அருள் புரிய வேண்டும் என வேண்டுகோள் விடுத்தான்.

அவனின் வேண்டுதலுக்கு இணங்கி அருளும் கருணையும் பொழியும் அன்னையானவள் அந்த அசுரனின் பெயரை சேர்த்து மூகாம்பிகா என வழிபட அருள் தந்தாள்.

அதிலிருந்து அன்னையை மூகாம்பிகை என்று அழைக்கிறார்கள்.

அதன்பின் அன்னையானவள் தனது அனைத்து சக்திகளையும் அங்கே கோலமகரிஷி கண்டெடுத்து வணங்கி வந்த அந்த அற்புத ஜோதிர்லிங்கத்தை மகா வரப்பிரசாத பீடமாக்கிக் கொண்டு அருள்புரிந்து வருகிறாள்.

அகிலாண்டீஸ்வரியுடன் கலந்து விட்ட ஜோதிர் லிங்கம்தான் யுகங்களைக் கடந்து இன்றும் வீரிய தீட்சண்யத்துடன் கொல்லூர் ஸ்ரீமூகாம்பிகையாக சன்னதியில் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது.

இது ஆதிசங்கரர் அருளிய ஸ்ரீசக்கரம்

இந்த ஒரு சக்கரத்தில் ஒன்பது சக்ரம் அடங்கியுள்ளது. இதில் 64 கோடி தேவதைகள் அரூபா ரூபமாக ஆரோகணித்துள்ளார்கள் என்றும் கூறுகிறார்கள்.

கிரகணத்தன்று அனைத்து கோயில்களும் மூடப்படும் ஆனால், மூகாம்பிகை கோயில் மட்டும் நடை அடைப்பதில்லை.

கிரகண நேரங்களிலும் மூகாம்பிகை கோவில் திறந்தவாறு இருந்து அர்ச்சனை, ஆராதனை ஆகியவை நடந்து கொண்டே இருக்கும்.

இந்த கோவிலின் மற்றொரு விசேஷம் என்னவென்றால் இங்கு பிரம்மசாரிகளுக்கு பூஜை செய்வதற்கும் சன்னதிக்குள் பிரவேசிப்பதற்கும் அனுமதி இல்லை என்பதாகும். தேவி பவனி வரும்போதும் அவர்களுக்கு எந்த ஈடுபாடும் இல்லை.

## எதிரி பிரச்சனை தீர்க்கும் தலம்

அம்பாளைத் தரிசித்த பின் சன்னதிக்கு எதிராக உள்ள பிரார்த்தனை மண்டபத்தில் உட்கார்ந்து ஸ்தோத்திரம் சொல்லித் துதிக்க வேண்டும். அந்தப் பிரார்த்தனை மண்டபத்தில் இருந்து பூஜித்தால் விசேஷ பலன் உண்டு என்பது அத்தலத்தின் ஐதீகம்.

எதிரிகளால் எந்த ஆபத்தும் வராமல் இருக்க இங்கு சண்டி ஹோமம் செய்பவர்கள் ஏராளம். வேறெந்த கோவிலிலும் இல்லாத அளவு சண்டி ஹோமம் ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் இங்கு நடைபெறுகின்றன.

# அதிக துன்பத்தால் அவதிப்படுகிறீர்களா?

# மொட்டை போடுங்க

பொதுவாக நம் ஊர்களில் மொட்டை போடும் பழக்கம் உள்ளது.

ஆனால் எதற்காக மொட்டை போடுகிறோம் என்பதற்கு பல காரணங்கள் உள்ளது.

பொதுவாக ஒரு வீட்டில் யாராவது இறந்தால் அந்த வீட்டில் உள்ளவர்கள் மொட்டை போடு வது வழக்கம் அதாவது ஒருவரின் இரத்த சமந்தப்பட்ட சொந்தங்கள் இறந்துபோனால் அவர் மொட்டை போட்டு கொண்டு தன் சோகத்தை வெளிப்படுத்துவார்.

ஆனால் இங்கு கோவில்களிலும் மொட்டை போடப்படுகிறதே.

துக்க வீட்டில் நிகழ்த்தப்படும்மொட்டை போடும் சடங்கு எதற் காக கோவில் களிலும் நிகழ்த்தப்படுகிறது. இதற்கும் காரணம் உண்டு.



அதாவது, வரும்முன் காப்பதே சிறந்தது (Precautions is better than cure)

இந்த வாக்கியத்தை கேள்விபட்டிருப்பீர்கள். உண்மையை சொல்ல போனால் இந்த வாக்கியத்தில் சொல்வதற்கேற்ப நமக்கு வரும் ஆபத்தை தடுக்கவே மொட்டை போடப்படுகிறது.

அது எப்படி மொட்டை போட்டால் ஆபத்து தடுக்கப்படும் என்று நீங்கள் கேக்கலாம்.

ஆனால், இதில் ஒரு ரகசியம் உள்ளது, அது என்ன வென்றால் நான் மேலை சொன்னது கேற்ப ஒரு வீட்டில் மரணம் நிகழ்ந்தாலே அவ்வீட்டில் மொட்டை போடப்படும் ஆனால் நாம் இங்கு மரணம் நிகழாமலே கோவில்களில் மொட்டை போட்டு விடுகிறோம் இதற்கு பெயர் தான் ஏமாற்றுவது.

அதாவது நடக்காத ஒரு செயலை நடந்தது போல் எண்ணி நாம் அதற்கான வினையை செய்து விட்டால் அச்செயல் அப்பொழுது நமக்கு நடக்காது.

புரியும் படி சொல்ல போனால் நடக்காத ஒரு மரணத்தை நடந்தது போல் நினைத்து, மரணம் நிகழ்ந்தால் போடப்படும் மொட்டையை மரணம் நிகழாமலே நாம் போட்டு விட்டோம் என்றால் அப்பொழுது அக்குடும்பத்திற்கு தீயது எதுவும் நிகழாது.

இதை உறுதிபடுத்தும் விதமாகதான் நம் ஊர்களில் உள்ள மக்கள் தலைக்கு வந்தது தலைபாகைவுடன் போயிற்று என்று கூறி நிம்மதி அடைவது வழக்கம்.

இன்னும் ஒரு எடுத்துக்காட்டு சொல்ல வேண்டும் என்றால் அதாவது நம் ஜாதகத்தில் நேரம் சரியில்லை நமக்கு தற்பொழுது மரண கண்டம் உள்ளது என்றால், ஜோசியர்கள் பொதுவாக சொல்லும் பரிகாரம் என்னவென்றால், முதலில் உங்கள் குலதெய்வ கோவிலுக்கு சென்று மொட்டை போடுங்கள் என்பார்கள். அப் படி செய்தால் கண்டம் விலகிவிடும் என்பார்கள்.

மொட்டை போடுவதில் இன்னொரு இரகசியம் மறைந்துள்ளது. அது என்னவென்றால், ஒரு மனிதனுக்கு முடி என்பது அழகை குறிக்கும் முடியில் தான் ஒரு மனிதனின் அழகு மறைந் துள்ளது, அந்த முடியை இழந்தால் அவன் அழகற்றவனாக மாறி விடுவான்.

நம் ஊரில் ஒரு பழமொழி உண்டு "அழகில் தான் ஆபத்து நிறைந்துள்ளது" என்று அதாவது ஒரு மனிதன் தலையில் முடிவுடன் இருந்தால் அழகாக இருப்பான், கூடவே ஆபத்தும் இருக்கும், முடி எனும் அழகை அவன் இழக்கும் போது அவனுக்கு உள்ள ஆபத்தும் குறைகிறது என்பதே உண்மை.

ஆக ஒரு மனிதனுக்கு ஆபத்து ஏதும் நிகழ கூடாது என்பதற்காகதான் முன்கூட்டிய மொட் டை போடப்படுகிறது. ஆனால் குழந்தை பிறந்த உடன் போடப்படும் மொட்டைக்கும் இதற்கும் சமந்தம் இல்லை.

குழந்தைக்குப் போடப்படும் மொட்டை, குழந்தையின் உச்சிக்குழியின் மீது சூரிய ஒளி படவேண்டும் என்பதற்காகவும், தாயின் வயிற்றில் இருந்த பனிக்குட நீரால் தலையில் முடியில் உள்ள ஒருசிலவகை கழிவுகளை போக்கும் விதமான 11வது மாதம் மொட்டை போடும் வழக்கத்தை நம் முன்னோர் வகுத்திருந்தனர்.

– கோகுல மணிகண்டன் சான்றார்
தொடர்பு எண்: 09677359474



## மூட்டு பிரச்சனை போக்கும் தாம்பூலம்

பதினைந்து, இருபது வருடங்களுக்கு முன்பு முதியவர்களுக்கு எலும்பு முறிவு என்பது அவ்வளவு சீக்கிரம் ஏற்படாது இதற்கு காரணம் அவர்களிடமிருந்த தாம்பூலம் தரிக்கும் பழக்கமே, ஆனால் தற்போது வாழ்க்கை முறை நவ நாகரீகத்தை நோக்கி செல்வதால் தாம்பூலம் என்பதை மக்கள் மறந்து விட்டதால்தான், குறிப்பிட்ட வயதிற்கு மேல் மூட்டு பிரச்சனை, மூட்டுவலி போன்றவை வருகிறது. இனியாவது தினமும் ஒருமுறையாவது தாம்பூலம் தரிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி மூட்டு பிரச்சனையிலிருந்து விடுதலையடைவோம்.




# சிறப்பாக நடைபெற்ற ஸனாதன் ஸன்ஸ்தா மற்றும் ஹிந்து ஜனஜாக்ருதி சமிதி குருபூர்ணிமா மகோத்சவம்

'ஹிந்து ராஷ்ட்ர'த்தை அமைப்பது காலத்திற்கேற்ற குரு காரியமாகும்', என்று திருமதி சுகந்தி ஜெய்குமார் அவர்கள் 21.7.2019அன்று அரும்பாக்கம், வைஷ்ணவ் கல்லூரி மினி ஹாலில் நடந்த குருபூர்ணிமா விழாவில் தன்னுரையில் கூறினார்.

பராத்பர குரு டாக்டர் ஆடவலே அவர்களின் குருபூர்ணிமா செய்தியினை திருமதி சுதா அவர்கள் வழங்கினார்.

ஹிந்து ராஷ்ட்ர ஸ்தாபனத்திற்காக செயல்படும் ஹிந்து ஜனஜாக்ருதி சமிதியின் ஹிந்து ஒற்றுமை காரியங்கள் மற்றும் பராத்பர குரு டாக்டர் ஆடவலே அவர்களின் ஈடு இணையற்ற காரியங்கள் பற்றிய குறும்படங்கள் காண்பிக்கப்பட்டன.

ஹிந்து தர்மாபிமானிகள் டாக்டர் ஜெயராமன் மற்றும் திரு ஜெயசங்கர் அவர்களுக்கு ஸனாதன் ஸாதகர் திரு பாலாஜி மரியாதை செய்தார்.

பத்தாம் வகுப்பு தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்ற ஸாதக மாணவன் மாதவனுக்கு பரிசு வழங்கப்பட்டது.

'வேஷ்டியைக் (லுங்கியை ஒத்தது) காட்டிலும் பஞ்சகச்சம் மேன்மையாக இருப்பதன் சாஸ்திரம்' என்ற சனாதனின் தமிழ் நூல் இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் திரு ரமேஷ் அவர்களின் திருக்கரங்களால் வெளியிடப்பட்டது. திரு ரமேஷ் அவர்கள் கோயில்கள் எவ்வாறு அரசாங்கத்தின் வசம் ஆகின்றன மற்றும் அவற்றை பாதுகாப்பது எவ்வளவு முக்கியம் என்பது பற்றி விளக்கமாக தன் உரையில் கூறினார்.

ஆன்மீகத்தில் ஆர்வம் கொண்ட தர்மாபிமானிகள் இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர்.

திருமதி கல்பனா பாலாஜி அவர்கள் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.

இவ்வருடம் ஸனாதன் ஸன்ஸ்தா மற்றும் ஹிந்து ஜனஜாக்ருதி சமிதி, குருபூர்ணிமா மகோத்சவத்தை இந்திய மொழிகளான மராட்டி, ஹிந்தி, கன்னடம், தமிழ், தெலுங்கு, மலையாளம், குஜராத்தி, வங்காளம், ஒடியா, அஸ்ஸாமீஸ், குருமுகி மற்றும் அயல்நாட்டு மொழிகளான ஆங்கிலம் மற்றும் நேபாளியில் நடத்தியது. இந்நிகழ்ச்சிகள் 13 மொழிகளில் 'பேஸ் புக் லைவ்' மூலமாக ஒளிபரப்பப்பட்டு மிக பிரம்மாண்டமான வரவேற்பை வாசகர்களிடையே பெற்றது. பல லக்ஷம் பக்தர்கள் பாரதத்திலும் அயல்நாடுகளிலிருந்தும் இந்நிகழ்ச்சி மூலம் பயனடைந்தனர்.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626





# தண்ணீர் சகுனம்

வீட்டை விட்டு வெளியே செல்லும்போது கால் இடறினால் உள்ளே வந்து அமர்ந்து நீர் அருந்திச் செல்லச் சொல்வார்கள் நம் முன்னோர், ஏன் இதை சொன்னார்கள் என்று யோசித்ததுண்டா?

சகுனத்தடை என்பதால்தான்.

சகுனம் என்பது நடைபெற உள்ள நிகழ்விற் கான குறிகாட்டி என்று எடுத்துக் கொள்ளலாம். வீட்டைவிட்டு வெளியே செல்லும்போது கால் இடறினாலோ, வாயிற்படியில் தலையில் இடித்துக் கொண்டாலோ, நடையில் தடுமாற்றம் உண்டானாலோ அதனை சகுனத் தடையாகச் சொல்வார்கள். இதுபோன்ற சகுனங்களை மூடநம்பிக்கை என்று ஒதுக்க முடியாது.

உண்மை நிலையை யோசித்துப் பாருங்கள். வெளியே ஒரு வேலையாக செல்லும்பொழுது கால் இடறுவது, தலையில் இடித்துக் கொள்வது, நடையில் தடுமாற்றம் முதலான நிகழ்வுகள் வெளியில் செல்பவரது கவனக்குறைவால்தான் நிகழ்கிறது.

அதே கவனக்குறைவுடன் இருந்தால் அவரால் அந்த வேலையை சரிவர செய்ய இயலாது. கவனக்குறைவினை சரி செய்வதற்காகவும், மனதளவில் அவர் தெளிவாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் வீட்டிற்குள் திரும்ப அழைத்து அமரச் செய்து நீரை அருந்துங்கள் என்கிறார்கள்.

குடிக்கின்ற நீர் மனதை சாந்தப்படுத்தும். தண்ணீர் என்பது கிரஹங்களில் சந்திரனின் ஆதிக்கத்தைப் பெற்றது.

அந்தச் சந்திரனையே மனோகாரகன் என்று அழைப்பார்கள்.



'ஔஷதீனாம் அதிபதி:' என்று சோமனைச் சுட்டிக் காட்டுகிறது வேதம். ஔஷதி என்றால் மருந்து. மருந்துகளுக்கெல்லாம் அதிபதி சோமன். அந்த சோமனின் பிரசாதமான தண்ணீரைப் பருகிவிட்டுச் செல்லும்போது நம் உடம்பில் உள்ள குறைகள் காணாமல் போகின்றன.

தண்ணீரை அருந்திவிட்டு வெளியில் கிளம்பும்பொழுது மனமும் சாந்தமாய் இருக்கிறது. வெளியில் சென்று செய்துமுடிக்க வேண்டிய பணியும் வெற்றி பெறுகிறது.

சகுனத்தடைகள் உண்டாகும்போதுதான் உள்ளே வந்து அமர்ந்து நீர் அருந்திச் செல்ல வேண்டும் என்பதில்லை, வெளியில் வேலையாகக் கிளம்பும்போதே மனைவியின் கையாலோ, மகளின் கையாலோ, தாயாரின் கையாலோ அல்லது அந்த வீட்டில் உள்ள சுமங்கலிப் பெண்ணின் கையாலோ ஒரு சொம்பு தண்ணீரை வாங்கிக் குடித்துவிட்டு கிளம்பிப் பாருங்கள்.

இதுபோன்ற சகுனத் தடையும் உண்டாகாது, கையிலெடுத்த செயலையும் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள்.



# திருமணத்தடை நீங்க... சிறுவாபுரிக்கு வாங்க!

திருமண தடைகளை எல்லாம் போக்கி, திருமணத்தை உரிய காலத்தில் நினைத்தபடி நடத்தி மகிழ்வு அடைய வகை செய்யும் சிறுவாபுரி பாலசுப்ரமணிய சுவாமி கோவிலை நாடினால் பலன் உண்டாகும். இக்கோவில், சென்னைக்கு அருகே. 35 கி.மீ., தொலைவில், சென்னை கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் சின்னம்பேடு கிராமத்தில் அமைந்துள்ளது.

திருமண பிரார்த்தனை நிறைவேற, சிறுவாபுரி முருகன் கோவிலுக்கு தொடர்ந்து, 6 வாரமும் ஏதாவது ஒரு கிழமையில் வரவேண்டும். அப்படி ஆறு வாரமும் வரமுடியாத பக்தர்களுக்காக, வள்ளி மணவாள பெருமானுக்கு கல்யாண மஹோற்சவம் நடைபெறும். திருமண பிரார்த்தனைக்காக வந்துள்ள ஆண்களுக்கும், பெண்களுக்கும், மணக்கோலத்திலுள்ள வள்ளி மணவாள பெருமான் முன்னிலையில் தரப்படும் மாலையை திருமண மாலையாக கருதி அணிந்து கொண்டு வலம் வரும் சுவாமியை பின் தொடர்ந்து வந்து வழிபட வேண்டும்.

இந்த பிரார்த்தனையை சிரத்தையுடன் முடித்துவிட்டு செல்பவர்களுக்கு. அடுத்த கல்யாண மஹோற்சவத்திற்குள். திருமணம் கைகூடுவது நிதர்சனமான உண்மை. இந்த வகையில், வரும் ஆகஸ்ட் 11.08.2019–ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வள்ளி கல்யாண மஹோற்சவம், சிறுவாபுரி முருகன் புகழ்பாடும் அண்ணாமலையார் ஆன்மிக வழிபாட்டு குழுவின் பத்தாம் ஆண்டு விழாவையொட்டி நடக்கிறது.

இக்குழுவினர், கடந்தாண்டு நடத்திய வள்ளி கல்யாண மஹோற்சவத்தில் பங்கேற்று, திருமணம் கைகூடியவர்கள், கடிதம் மூலமாகவும், தொலைபேசி வாயிலாகவும் மகிழச்சியை பகிர்ந்து கொண்டுள்ளனர்.

வரும் ஆகஸ்ட் 11ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, நடைபெறும் கல்யாண மஹோற்சவம் காலை 9 மணிக்கு அபிஷேகத்துடன் துவங்குகிறது; திருமண பிரார்த்தனைக்காக வருபவர்கள், கோவிலின் இடவசதியை கருத்தில் கொண்டு, காலை 7 மணிக்குள் கோவிலுக்கு வந்தால், ஏற்பாடுகள் செய்வதற்கு வசதியாக இருக்கும். விழாவில் பங்கேற்கும் பக்தர்களுக்கு மதியம் அன்னதானத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்புக்கு:
அண்ணாமலையார்
ஆன்மிக வழிபாட்டு குழு, சென்னை.
தொலைபேசி எண்: 9790957593,
9944309651, 9940625308

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| காலை 6மணி: | விநாயகர், ஆதிமூலவர் அண்ணாமலையார், உண்ணாமலை அம்மன் அபிஷேகம். |
| 6.30 மணி: | மூலவருக்கு அபிஷேகம் அலங்காரம். |
| 9 மணி: | வள்ளிமணவாள பெருமானுக்கு அபிஷேகம் |
| 10 மணி: | திருக்கல்யாணம் |
| 11 மணி: | சுவாமி புறப்பாடு தொண்ட உழவாரம் கைலாய வாத்தியம். |
| 12 மணி: | அன்னதானம் |

GET IT ON Google Play
கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
ஆன்மிகமலர் .காம்
www.aanmeegamalar.com

# ராம பிள்ளையாரும் துக்கிரிப்பாட்டியும்

## நாம மகிமைப் பற்றி பெரியாவா சொன்ன உண்மைச் சம்பவம்

காஞ்சி மகானிடம் ஒரு பக்தர், தான் இன்ன கிராமத்திலிருந்து வருவதாக அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"உங்க கிராமத்தில் துக்கிரிப்பாட்டி என்று ஒரு பாட்டி இருந்தாளே? தெரியுமா?" என்று கேட்டார் பெரியவா.

"அவள் எங்களுக்கு உறவு தான்" என்றார் வந்தவர்.

"ராமவிநாயகர் இருக்காரா?.."

"எங்க ஊர் விநாயகருக்கு ராம விநாயகர் என்று தான் பேரு.."

பாட்டியைப் பற்றியும் விநாயகரைப் பற்றியும் பெரியவா மேலும் ஆழமாக விசாரித்தார்கள். ஆனால், பக்தருக்கு முழு விவரமும் அளிக்க முடியவில்லை. திணறினார்.

பெரியவாளே சொன்னார்கள்:

"அந்தக் கிராமத்தில் சிவன் கோயில் இல்லை, பெருமாள் கோயிலும் இல்லை. பிள்ளையார் கோயில் மட்டும் தான் இருந்தது.

தினமும் சாயங்காலம் கிராம எல்லையில் ஓடிக்கொண்டிருந்த ஒரு கிளை நதியில் அந்த ணர்கள் சந்தியா வந்தனம் செய்துவிட்டு, வீட்டுக்குத் திரும்பும் வழியில் பிள்ளையார் கோயிலில் உட்கார்ந்து ராம நாம ஜபம் செய்வார்கள். ஊர் மக்களும் நாம சங்கீர்த்தனத்தில் கலந்து கொண்டு உரத்த குரலில் ராம நாமம் சொல்வார்கள். ராம நாம தாரக மந்திர ஒலி, கிட்டத்தட்ட ஒரு கிலோமீட்டர் தூரம் வரை கேட்குமாம். ராமநாம சங்கீர்த்தனம் நடைபெறும் விநாயகர் கோயிலானதால், பிள்ளையாருக்கே ராம விநாயகர் என்று பேர் வந்துவிட்டதாம்.

அடுத்ததாக **துக்கிரிப் பாட்டி** விஷயம்.

ஏழு வயதில் ஒரு பெண் குழந்தைக்குத் திருமணமாகி, ஒன்பதாம் வயதில் மாங்கல்யத்தை இழந்தாள்.

கிராம மக்கள் பார்வையில் அவள் மிகவும் இழிந்தவளாகி விட்டாள். அவளுக்குத் துக்கிரி என்ற அவப் பெயரே சூட்டப்பட்டுவிட்டது.

வயது ஏற ஏற, அந்தப் பெண்ணுக்குத் தன் நிலை பற்றிய உண்மை தெரிய ஆரம்பித்தது. புரட்சி செய்ய முடியாத காலம். கிராம மக்களைப் பகைத்துக் கொள்ளவும் முடியாது.

கைம்பெண் சம்பிரதாயப்படி வாழ்க்கையை அமைத்துக் கொண்டாள்.

விடியற்காலை நாலு மணிக்கே வாசல் தெளித்து, கோலம் போட்டு, பிறையில் விளக்கு ஏற்றி வைத்து விட்டு உள்ளே போய் விடுவாள். அப்புறம் மறுநாள் விடியற்காலையில் தான் அவள் கால்கள் தெருவில் பதியும்.

உள்ளே என்ன தான் செய்வாள்?

ராம நாம ஜபம் தான். அலுக்காமல், ஆயாசப் படாமல் ராமஜபம் தான்.





சாப்பாடு என்று ஏதோ சமைத்துச் சாப்பிடுவாள். உடம்பில் உயிர் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டிய அளவு மட்டுமே.

துக்கிரியின் வீட்டுக்கு யாராவது, எப்போதாவது போனால் உண்டு.

நாள்தோறும் லட்சத்து எண்ணாயிரம் என்று ஒரு கணக்கு. வெறுமனே துக்கிரியாக இருந்தவள், துக்கிரிப் பாட்டியாகி விட்டாள். அவள் செய்த ஜபத்துக்குக் கணக்கே இல்லை . ராம பிரபுவுக்கு மட்டும் தெரிந்திருக்கும்.

கிராமத்தில் ஒரு குழந்தைக்கு வயிற்று வலி பொறுக்க முடியவில்லை. ஓ என்று அலறல். நாட்டு வைத்தியர் சுக்கு, ஓமம் போன்ற நாட்டு மருந்துச் சாமான்களைப் போட்டு, கஷாயம் வைத்துக் கொடுக்கச் சொன்னார்.

அவர் சொன்ன நாட்டு மருந்துச் சாமான்கள் யார் வீட்டிலும் இல்லை. வேறு வழியில்லாமல் வயிற்று வலிக் குழந்தையையே துக்கிரிப் பாட்டி வீட்டுக்குப் போய் விசாரிக்கச் சொன்னார்கள்.

'ஓமம் வேணும் ' என்று பயந்து கொண்டே கேட்டான் சிறுவன். சுக்கு.. திப்பிலி.. அரத்தை.. எல்லாவற்றையும் பாட்டி கொடுத்தாள்.

'உனக்கு என்ன உடம்பு?' என்று கேட்டாள் பாட்டி.

'வயத்து வலி.. தாங்கலே ..'

'இரு.. வந்துட்டேன்..'

சிறிது விபூதி எடுத்துக் கொண்டு வந்து 'ராம, ராம' என்று சொல்லிக் கொண்டு, பையனின் நெற்றியில் பூசினாள். உடனே வீட்டுக்கு ஓடி விட்டான் பையன்.

'எனக்கு கஷாயம் வேண்டாம்..'

'ஏண்டா?'

'வயத்து வலி நின்னு போச்சு!' அம்மாவுக்குப் பிரமிப்பு. மகனின் நெற்றியில் திருநீற்றைக் கண்டால்.

'பாட்டி தான் பூசினா.. உடனே வலி நின்னு போச்சு..' ஊரில் இதே பேச்சுத் தான்!

துக்கிரிப் பாட்டிக்கு இப்படி ஒரு தெய்வீக சக்தி வந்திருக்கிறதா? அவள் துக்கிரி இல்லையா? ராம நாம பிரபாவத்தைக் காட்டுவதற்காகவே அவள் வாழ்வில் சிறு வயதிலேயே, பேரிடி விழுந்ததோ?

அப்புறம் அந்தக் கிராமத்தில் வைத்தியருக்கு வேலையேயில்லாமல் போய் விட்டது! ராமநாமப் பாட்டி அந்த ஸ்தானத்துக்குப் போய் விட்டாள் . அவளிடம் இருந்த ஒரே மருந்து திருநீறு!

பெரியவா இந்த மாதிரி நடந்த சம்பவங்களைக் கதை மாதிரி சொல்வதைக் கேட்டவர்கள் பாக்கியசாலிகள்!

– மகா பெரியவாள்
தரிசன அனுபவங்கள்–vol.3



# மந்திரம் நாமம் உரு

## எளிய முறையில் தெளிவான விளக்கங்கள்

ஆன்மிக விஷயங்களில் ஒரு சில பொருட்கள், உருவேற்றப்பட்ட பொருட்கள் என்பதை பல இடங்களில் நாம் கேட்டிருப்போம்.

யாருக்காவது உடல்நிலை சரியில்லை என்றால், திருநீறு, குங்குமம், துளசி தீர்த்தம் போன்றவற்றில் சிவநாமம், அம்பாள் அல்லது திருமால் நாமம் போன்றவற்றை உருவேற்றி அவர்களுக்கு கொடுத்தால் நோயின் பாதிப்பு குறையும் என்று முன்னோர்கள் கூறுவதை கேட்டிருப்போம்.

அந்த உருவேற்றம் என்றால் என்ன என்பதை எளிமையாக பார்ப்போம்.

மந்திரம் என்பது இறைவனின் நாமமே. மன ஒருமைப்பாட்டுடனும் நம்பிக்கையுடனும் சொல்லப்படும் இறைத் திருநாமமே மந்திரம் ஆகிறது. ‘ஒரு மந்திரத்தைத் தெரிந்து கொண்டு அதனைத் திரும்ப திரும்பச் சொல்வது ‘உரு’ எனப்படுகிறது.

இப்படி திரும்ப திரும்ப ஒரு மந்திரம் உருவேற்றும் பொழுது மனம் ஒருமைப்படுகிறது. கடவுளின் அருள் கிடைக்கின்றது. நினைத்தது நடக்கிறது.

திருநீறு, குங்குமம் அல்லது துளசியை வைத்து மேற்கண்ட மந்திரத்தை ஆயிரம் முறை, லட்சம் முறை, அல்லது கோடிமுறை சொல்லிவந்தால் மேற்கண்ட பொருட்களில் அபரிமிதமான சக்தி கிடைக்கும்.

இதைவைத்து பல்வேறு நோய்களை நம் சித்தர்கள், மகான்கள் தீர்த்துவைத்துள்ளனர். இதைத்தான் உருவேற்றப்பட்ட பொருட்கள் என்று கூறுவார்கள்.

(உருவேற்றப்பட்ட பொரு ளின் மகிமையை தெரிந்து கொள்ள 18ம் பக்கத்தில் உள்ள "ராம பிள்ளையாரும் துக்கிரிப்பாட்டியும்" பெரியவா கூறிய உண் மைக் கதையை முழுவதும் படிக்கவும்)

நமது நல்ல எண்ணங்களை வலுப்படுத்துவதிலும், அதனை நிறைவேற்றுவதிலும் மந்திரங்களுக்கு மிஞ்சியது எதுவுமே இல்லை.’

நமது தினசரி வாழ்வில் மந்திரங்கள் அற்புத ஆற்றல்களைக் கொடுக்கின்றன. மந்திரங்கள் இறைவனுக்கும் நமக்கும் இடையே பாலமாக அமைகிறது.

### எவ்வாறு மந்திரம் சொல்லுதல் வேண்டும்?

- நம்பிக்கையோடு மந்திரத்தைச் சொல்லுதல் வேண்டும்
- மன ஒருமைப்பாட்டுடன் மந்திரத்தைச் சொல்லுதல் வேண்டும்.
- ஒரு நல்ல நாளில் ஆலயத்தில் தட்சிணா மூர்த்தி சன்னதியில் அவரை வேண்டி, குரு நிலையில் இருந்து அவர் நமக்குச் சொல்வதாகக் கருதிச் சொல்ல ஆரம்பிக்க வேண்டும்.
- நாள்தோறும் இஷ்ட மந்திரத்தைக் குறைந்தது 27 முறைகளாவது ஜபித்தல் வேண்டும்.
- நாள்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் மந்திரத் தைச் சொல்லிப் பழகுதல் வேண்டும்.



## நாமத்தைச் சொல்லுவதால் ஏற்படும் நன்மைகள்

### புண்ணியம் கிடைக்கின்றது

“எல்லா புண்ணிய தீர்த்தங்களில் நீராடுதல், அவிமுக்தி தலமான காசியில் எண்ணற்ற லிங்கங்களை ஸ்தாபிதம் செய்தல், வேத விற்பன்னர்களுக்குச் சூரிய கிரகணத்தன்று பலமுறை பல கோடி சொர்ண தானம் செய்தல், கங்கைக் கரையில் அஸ்வமேத யாகம் செய்தல், தண்ணீர் கிடைக்காத இடங்களில் பல கிணறுகள் வெட்டுதல், பஞ்ச காலத்தில் நூற்றுக் கணக்கானோருக்கு அன்ன தானம் செய்தல் இவை யாவும் செய்வதால் எவ்வளவு புண்ணியம் கிடைக்கின்றதோ அதற்கு ஈடான புண்ணியம் இறைவனின் திரு நாமத்தை உச்சரிப்பதனால் கிடைக்கும்”.

### பாவங்கள் நாசமாகின்றன

“சிவ சிவ” என்று ஜபிப்பதால் பல கோடி பாவங்கள் உடனடியாக நாசமாகின்றன” என்கிறது பிரம்ம புராணம். மனிதராகப் பிறப்பெடுத்த நாம் அறிந்தும் அறியாமலும் பாவங்களைச் செய்கின்றோம். அந்தப் பாவங்கள் நாசமாக நன்மைகள் உதயமாக நாமத்தைச் சொல்லுதல் வேண்டும். பாவ எண்ணங்களிலிலுந்து, தீய எண்ணங்களிலிருந்து விடுபட நாமத்தை நவிலுதல் வேண்டும். கொல்லித் தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க் குரங்காய்த் துள்ளுகின்ற கள்ள மனத்தை அடக்கியாள்வதற்கு இறைவன் திருப் பெயரை இயம்புங்கள்.





### சகல நன்மைகளும் கிடைக்கின்றன

கல்வி, செல்வம், நல்ல வேலை, நல்ல கணவன் மனைவி, மக்கள், வாழ்க்கையில் நிம்மதி, அமைதி, எதிலும் வெற்றி இவைதாமே எப்போதும் நாம் அடைய நினைப்பவை. இந்த நன்மைகள் அனைத்தும் நம்மை நாடி வந்து சேர்வதற்கு ஆண்டவன் பெயரை அல்லும் பகலும் சொல்லுங்கள்.

### ஞானம் கைகூடுகின்றது

“நல்ல ஞானம் வேண்டும் என விரும்புகின்றவர்கள் இறைவனின் நாமத்தை ஓத வேண்டும்” என்கிறார் ஆதி சங்கரர். வாழ்க்கையின் இன்ப துன்பங்களைச் சமமாகப் பாவிக்கும் மனநிலை ஞானமாகும். “போருக்கு நின்றிடும் போதும் சிந்தை பொங்குதல் இல்லா நிலையே ஞானம்” என்பான் பாரதி. இந்த நிலை அடைதல் என்பது இறை நாமம் சொல்லுபவர்க்கே மிகவும் எளிது.

### முக்திப் பேற்றுக்கு வழிகாட்டுகின்றது

முக்திப் பேற்றுக்கும் வழி காட்டுகிறது நாமம், “முக்தியடைவதற்கு கிருஷ்ணா! கோவிந்தா! என்ற திருப் பெயர்களை எல்லா நேரங்களிலும் சொல்லிக் கொண்டிருப்பது ஒன்றே போதுமானது” என்று கூறுவார்கள்.



www.aanmeegamalar.com







## தன்வந்திரி பீடத்தில் நடைபெற்ற

# வாஸ்து பூஜை, வாஸ்து சாந்தி ஹோமம்

வேலூர் மாவாட்டம் வாலாஜாபேட்டை அனந்தலை மதுரா கீழ்புதுபேட்டையில் அமைந்துள்ளது ஸ்ரீ தன்வந்திரி ஆரோக்ய பீடமாகும். இப்பீடத்தின் ஸ்தாபகர் மற்றும், பீடாதிபதி "யக்ஞஸ்ரீ கயிலை ஞானகுரு" டாக்டர் ஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள், ஆசிகளுடன் 27.07.2019 அன்று (சனிக்கிழமை) காலை 7.30 மணி முதல் 9.00 மணிக்குள்ளாக வாஸ்து நாளை முன்னிட்டு வாஸ்து சாந்தி ஹோமமும், தன்வந்திரி பீடத்தில் பிரதிஷ்டை செய்துள்ள ஸ்ரீ வாஸ்து பகவானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றது.

அந்தகாசுரன் என்பவனை சிவன் வதம் செய்தார். அப்போது அவரது நெற்றியில் இருந்து வழிந்த வியர்வையில் இருந்து ஒரு பூதம் கிளம்பியது. அது தன் பசி நீங்க சிவனை எண்ணி தவமிருந்து பூமியை விழுங்கும் சக்தி பெற்றது.

பிரம்மா உள்ளிட்ட தேவர்கள் பூமியை விழுங்க முயன்ற பூதத்தைக் குப்புறத் தள்ளி எழாதபடி அழுத்திப் பிடித்துக் கொண்டனர். பசியால் வாடிய பூதத்திடம், "இன்று முதல் நீ வாஸ்து புருஷன் என்று அழைக்கப்படுவாய். பூமியைத் தோண்டிக் கட்டிடம் கட்டும் போது செய்யும் பூஜையின் பலன் உனக்கு கிடைக்கும்," என்று கூறினர்.

மத்ஸ்ய புராணத்தில் இந்த வரலாறு கூறப்பட்டுள்ளது. பூமிபூஜையின் போது வாஸ்து ஹோமம் மற்றும் பூஜை செய்தால் கட்டுமானப்பணி தடையின்றி நிறைவேறும்.

வாஸ்து பகவான் நித்திரை விடும் நாட்களில், அவர் விழித்திருக்கும் 90 நிமிடங்களில் பூஜை செய்யலாம். இந்த நேரப்பொழுதில் அவர் ஒவ்வொரு 18 நிமிடங்களில் முறையே பல் துலக்குதல், ஸ்நானம் செய்தல், பூஜை செய்தல், உணவு உண்ணுதல், வெற்றிலை போடுதல் ஆகிய காரியங்களில் ஈடுபடுவார். இதில், அவர் உணவு உண்ணும் நேரம் மற்றும் வெற்றிலை போடும் நேரத்தில் பூஜிப்பது வெகு விசேஷம்.

அந்த வகையில் வாஸ்து நாளை முன்னிட்டு நடைபெற வாஸ்து சாந்தி ஹோமத்தில் நவகிரகங்களின் திருவருளை பெறும் பொருட்டு நவதானிங்களையும், நவரத்தினங்களையும், சிறப்பு மூலிகைகளையும் சேர்க்கப்பட்டது.

மேலும் இந்த வாஸ்து யாகத்திலும், அபிஷேகங்களிலும் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று வாஸ்து குறைபாடுகள் நீங்கவும், வீடு மனை பாக்யம் பெறவும், வாஸ்து தோஷங்கள் அகலவும், மேலும் பல்வேறு நன்மைகள் ஏற்பட கூட்டு பிரார்த்தனை செய்தனர். பங்கேற்ற பக்தர்களுக்கு பீடாதிபதி யக்ஞஸ்ரீ முரளிதர ஸ்வாமிகள் அருளாசிகளை வழங்கி இறை பிரசாதம் வழங்கினார்.

Sri Danvantri Arogya Peedam,
Ph: 04172-230033, 0944330203.



www.aanmeegamalar.com

# துன்பத்திற்கு மேல் எழுதல்

குருதேவர் பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: “தன்னுடைய பிரதிபிம்பங்களாகப் படைக்கப்பட்டுள்ள மனிதர்களைத் தன்னிடமே திரும்ப அழைத்துக் கொள்வதற்கு துன்பம் ஏன் ஒரு சோதனையாக இருக்கிறது என்று என்னுடைய தெய்வத்தந்தையிடம் நான் இடைவிடாமல் வாக்குவாதம் புரிந்திருக்கிறேன். நான் என் தந்தையிடம் கூறுவது துன்பத்தில் ஒரு நிர்பந்தம் உள்ளது. அறிவுறுத்தி இணங்க வைத்தலும் அன்பும், மனித இனத்தை விண்ணுலகத்திற்கு திரும்ப அழைத்துக் கொள்வதற்கு சிறந்த வழிகளாகும் என்பதுதான். எனக்கு விடை தெரிந்திருந்தாலும்கூட இத்தகைய விஷயங்களைப்பற்றி எப்பொழுதும் நான் இறைவனுடன் சண்டையிட்டு இருக்கிறேன். ஏனெனில் ஒரு தந்தை தனது மகனைப் புரிந்து கொள்வதைப்போல் அவன் என்னைப் புரிந்து கொள்கிறான்.”

"இந்த உலகம் எவ்வளவு சோகமயமானது ! இது ஒரு நிச்சயமற்ற இடமாக இருக்கிறது. ஆனால் உங்களுக்கு என்ன நேர்ந்திருந்தாலும் சரி, நீங்கள் உங்களைத் தெய்வத் தந்தையின் திருப்பாதங்களில் ஒப்படைத்துவிட்டு அவனது கருணையை நாடினால் அவன் உங்களை மேலே தூக்கிவிட்டு, இந்த வாழ்க்கை ஒரு கனவு மட்டுமே என்பதை உங்களுக்குக் காண்பிப்பான். அனைத்துவிதமான நோய்கள், துன்பங்கள், தொந்தரவுகள், இதய வேதனைகள் ஆகிய கொடுங்கனவு போன்ற ‘தீமைகளுக்கு உள்ளாக்கப்பட்ட ஓர் அழியும் மனிதனாகக் கனவு கண்டுகொண்டிருக்கின்ற ஒவ்வொரு ஆன்மாவின் மனமயக்கமும் இதைப் போன்றதே, இந்தக் கொடுங்கனவிலிருந்து தப்பிப்பதற்காக ஒரே வழி இறைவனுடன் அதிகமாக பற்று கொண்டிருப்பதும் இவ்வுலகக் கனவு உருவங்களுடன் குறைவாக பற்றுகொண்டிருப்பதும் ஆகும்.”

“இறைவனது திட்டத்தில் கொடுமைக்கு இடமேயில்லை. ஏனெனில் அவனது பார்வையில் நன்மை அல்லது தீமை என்பதே கிடையாது. ஒளி மற்றும் நிழல்களின் சித்திரங்கள் மட்டுமே. இறைவன் ஒரு வியக்கத்தக்க பிரபஞ்ச நிலையின் நிரந்தர ஆனந்தமான மகாசாட்சியாகத்தான் இருப்பதைப் போலவே வாழ்க்கையின் இருமைக் காட்சிகளை நாம் நோக்கவேண்டும் என திருவுள்ளங் கொண்டுள்ளான்.”

## இறைவனுடன் ஒன்றிய நிலையில் வாழ்க்கை ஒரு கனவு எனபதைத் தெரிந்துகொள்ளுங்கள்

குருதேவர் மேலும் அருளுகிறார்: “பரம்பொருளின் உணர்வு நிலையில் வாழுங்கள்; இறைவனுடனான அந்த ஒன்றியநிலையில் வாழ்க்கை ஒரு கனவு என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் முயற்சியை மேற்கொண்டால், அதை அறிவது மிகவும் சுலபமாகும். துன்பம் நிகழும்பொழுது உங்களுடைய உணர்வு நிலையை தேகத்துடன் அடையாளப்படுத்துவதிலிருந்து பிரிப்பது மிகவும் கடினமாகும். எனவே உங்களுக்கு வலிமையும் ஆரோக்கியமும் இருக்கும்போதே, இப்பொழுதே விவேகத்துடன் முயற்சியை மேற்கொள்ளுங்கள்.”



63
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக


ஆன்மிகமலர் மெயில் புக்

"லௌகீக ஆசைகள் இறைவனுக்கான ஆசையை அகற்றிவிடும். ஒவ்வொரு நாளும் எவரோ ஒருவர் எனக்கு இதுவோ அல்லது அதுவோ தேவைப்படுகிறது என என்னிடம் கூறுகிறார். அது கேலிக்குரியதாகத் தோன்றுகிறது. ஏனெனில் எனக்கு 'தேவை' என்று என்னிடம் கூறப்பட்டவைகளை ஆயிரக்கணக்கானோர் பெற்றிருக்கவில்லை என்பதை நான் அறிவேன்.

அவர்களுக்கு அது தேவையில்லையெனில், எனக்கு எதற்கு.? உங்களுடைய ஒரே உண்மையான தேவை இறைவன்; வேறு எந்தத் தேவையும் இல்லை. உடமைகளுடனோ? இசையுடனோ; புத்தகங்களுடனோ உணவுடனோ அல்லது வேறு எந்த புலன் இன்பங்களுடனோ பற்று கொள்ளாதீர்கள். இறைவனில் உங்களுக்கு அமரவாழ்வு உள்ளது.

இந்த மாபெரும் உண்மையையறிந்துகொள்ளுங்கள்; இல்லையெனில் வாழ்க்கையில் உங்களுடைய திட்டங்கள் முந்திக்கொண்டுவிடும், அத்துடன் நீங்களும் அவற்றால் பிணைக்கப்பட்ட நிலையிலேயே இறக்க நேரிடும். நீங்கள் அவனுடன் ஒன்றிணைந்தால், நீங்கள் இந்தக் கனவு பூமிக்கு மீண்டும் திரும்பிவரவேண்டிய கட்டாயமில்லை. இப்பூமியில் இறைவனுடைய குழந்தைகளுக்கு சேவை புரிவதன் மூலம் அவனுக்கு சேவை புரிய உங்கள் விருப்பப்படி நீங்கள் வருவதற்கும் போவதற்கும் சுதந்திரமானவர்கள்."

"இறை ஆனந்தத்தில் நீங்கள் வாழ்வீர்களானால் மரணம் என்றால் என்ன என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள், நீங்கள் இயந்திரகதியில் பிரார்த்தனை செய்தால், அந்த நிலையை அடையமாட்டீர்கள். உங்களுடைய பிரார்த்தனையில், இறைவன் செவிமடுக்கிறான் என்ற நம்பிக்கையுடன் முழுமையாக ஆழ்ந்துவிடுங்கள். இவ்வாறாக தீவிர ஊக்கத்துடன், அன்புடன் இறைவனிடம் பிராத்தனை செய்தால் அவன் எந்த நேரத்திலும் உங்களிடம் வருவான்."

குருதேவர் அருளியவாறு, சாசுவதமான இறைவனை அடைய வேண்டும் என்ற எண்ணம் மனதில் வேரூன்றினால், அவர்களு டைய அன்றாட நடவடிக்கைகளைக் கவனித் தால் தெரியவரும். அவை அனைத்தும் உயர்ந்தவைகளாக இருக்கும்.

அது எண்ணங்களானாலும் சரி, செயல்களானாலும் சரி, வார்த்தைகளானாலும் சரி, அதிலிருந்து அவர்களுடைய குறிக்கோள்எவ்வளவு சக்தி

**இறை ஆனந்தத்தில் நீங்கள் வாழ்வீர்களானால் மரணம் என்றால் என்ன என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள், உங்களுடைய பிரார்த்தனையில், இறைவன் செவிமடுக்கிறான் என்ற நம்பிக்கையுடன் முழுமையாக ஆழ்ந்துவிடுங்கள். தீவிர ஊக்கத்துடன், அன்புடன் இறைவனிடம் பிராத்தனை செய்தால் அவன் எந்த நேரத்திலும் உங்களிடம் வருவான்**

வாய்ந்துள்ளது என்பதைக் கண்டறியலாம்.

அதே போன்று அழிவுற்ற உலகப்பொருட் களை அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடையவர்களையும் அவர்களின் நடவடிக்கைகளிலிருந்து தெரிந்துகொள்வது மிகவும் சுலபம். எப்பொழுதும் நல்ல எண்ணங்களுக்கும் நல்ல வார்த்தைகளுக்கும் அதிக மதிப்பும் அதிக சக்தியும் உள்ளது. அவை இறைவனின் சன்னதியிலிருந்துகொண்டு, சொல்வது போன்றதாகும். அதாவது இறைவனே கூறுகிறான் எனப்பொருள்படும்.

அதுபோன்று தீயவற்றிற்கும் அதிக சக்தி உள்ளது. அவை, செய்பவனைத் தாக்கு கிறது. அதுமட்டுமின்றி அவனை அவை அழித்துவிடும். அவை அவற்றிற்கான பிரதிபலிப்பைக் காட்டத்தான் செய்கின்றன.

இறைவனை உணர்ந்தவர் இவ்வுலகில் மிகவும் ஜாக்கிரதையாகத்தான் வாழுவர். அதில்லாதவர்கள் வரம்பின்றிப் பேசுவர். அதனால் விளைவுகள் ஏற்படும் என்ற அச்சமே இல்லாமல் வாழுவர். தனக்கு வந்த வினைகளுக்குக் காரணம் பிறர்தான் என்று பிறரை குறை கூறுவர். அதை அவ்வாறே உறுதிப்படுத்துவர்.

இன்றைய உலகில் இப்படிப்பட்டவர்கள்தான் ஏராளமாக இருக்கின்றனர். தம் செயல்களும் எண்ணங்களும்தான் தமக்கு வினைகளாக வருகிறது என்று ஒரு கணம் நினைத்துப்பார்த்து, பின்னர் புரிந்துகொண்டு, தன் தவறை உணர்ந்தால் இறைவனை எளிதில் உணரமுடியும். மேலே கூறியவாறு பிறரை குறைகூறி தன் வினைகளுக்கெல்லாம் பிறர்தான் காரணம் என்று பிறர்மேல் பழிபோடுபவர்களை எவ்வாறு திருத்துவது? கற்றுணர்ந்தாலும் அவர்களுக்கு மூளை வேலை செய்யாது.

எங்கே தவறு நடந்துள்ளது என்பதைக் கண்டறிய, சற்று அமைதியாக உட்கார்ந்து கூர்ந்து சிந்தித்துப் பார்த்தால் நன்கு அறிய இயலும். அதை இறைவனேதான் உணரவைக்கிறான். தன் தவறை அறியாமலிருப்பதன் காரணம் உலகப் பொருள் மேலுள்ள ஆசையே ஆகும்.

எனவே, மற்ற ஆசைகள் அனைத்தையும் துறந்து இறைவன்தான்; இறைவன் மட்டும்தான் தேவை என்றும் ஆசையும் பேராசையும் எல்லாம் அவன்மேல் மட்டும் வைத்துக்கொண்டால் இறைவன் அந்த பக்தன்மேல் திருவுள்ளம் கனிந்து உடனிருந்து வழிகாட்டுவான். "செய்வதும் அவனே! செய்ய வைப்பதும் அவனே!" என்பது தெரியவரும். அது இறைவனை குறிக்கோளாக்கி அவனை நேசிக்கின்றவர்களுக்கு மட்டும்தான் தெரியவைப்பான்.

மாறாக சாதாரண மனித னுக்கு இல்லை! ஒருவன் தன்னுடைய வார்த்தை களோ செயல்களோ எல்லைமீறிச் சென்றுகொண்டிருந்தால் அதை உடனே அறிந்து முறியடித்துவிடவேண்டும். இவ்வாறு, இதுபோன்ற பழக்கங்களையும் குணங்களையும் சிறிது சிறிதாக மாற்றிவிடலாம். அதனால் நம் கர்மாவும் குறையநேரும்.

இறைவனை அறிந்துணர்ந்தால் மட்டும்தான் இவ்வாறு செயல்பட முடியும். இறைவன் கருணை வடிவமானவன். அவன், தன்னை நேசிக்கின்ற தன் குழந்தைகளுக்கு மிகுந்த ஆதரவுடன் இருப்பான். அதனால் அவர்களின் குற்றங்களை அல்லது தவறுகளை உணர்த்தி, அவற்றை இறைவனே, மேலும் அவர்கள் தவறு செய்யாமல் பாதுகாப்பான். ஒருவன் தன்னை இறைவனுக்கு அர்ப்பணம் செய்தால் அவனுடைய வாழ்க்கையில் இறைவன் அவனை வழிநடத்துவான்.

துன்பம் அவனை அணுகாமலிருக்கவேண்டுமென்றால், இறைவன் காட்டிய வழியில்தான் செல்ல வேண்டும். பின்னர் அவனுக்கு எந்த இடையூறும் விளையாது. மீறி ஏதாவது துன்பம் நேர்ந்தால் இறைவனே அதை துடைத்து விடுவான் என்பது உறுதி. ஏனெனில், நம் கையை பிடித்து நடந்துவது இறைவனா கையால் அவனுக்கு ஏற்பட்ட துன்பம் அல்லது இடையூறு எதுவாக இருந்தாலும் சந்தேகமின்றி ஒரு கணத்தில் வெட்டிவிட்டு, தன் குழந்தையை எந்தத் தொல்லையும் தொடாமல் இறைவன் பாதுகாத்துக்கொள்வான் என்பதை மனதில் நிறுத்தி, இந்த உலகத்தில் வாழ்ந்தாலும், மனதால் உலகவாழ்க்கையிலிருந்து விலகிவிட்டு, இறைவனுடன் ஒன்றிணைந்து அவனைப்பற்றிய எண்ணத்தை இதயத்தில் பிரதிபலிக்கச்செய்வதே சாலச்சிறந்தது. எப்பொழுதும் இறைவன்மேல் மனம் நங்கூரமிட்டவாறு வாழவேண்டும்!

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக
டவுன்லோடு செய்தும் படிக்கலாம்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

•••

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

•••

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

•••

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



**ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்**

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# கேள்வி கேட்பது மட்டும் சிந்தனையல்ல

❖ உன்னுடைய சொந்ததவறுகளை நீயே கண்டுபிடி, பிறர் கண்டுபிடிக்க விட்டு விடாதே. எப்படி கண்டுபிடிப்பது என்றால் சிந்தனை, ஓயாத படிப்பு, எடுத்து இயம்புதல், பேசுதல், உறுதிப் படுத்துதல் இவைகளினால் அது முடியும். இவ்வண்ணம் உனது தவறுகளைக் களைந்துகொண்டு உன்னையே திருத்தப் பாதையில் வைத்து நீயே முன்னேறுவாய் இதுவே கல்வி.

❖ மேற்சொன்னது உண்மை ஆராய்ச்சி என்றாலும் கல்வி கற்பதற்காக கல்வி சம்பந்தமான கேள்விகளை எழுப்புவது மட்டும் உனது சிந்தனையின் பகுதி என்று எண்ணிவிடாதே. கேள்வி கேட்பது மட்டும் சிந்தனையல்ல. அது அதிக அறிவைப் பெறுவதற்கு உண்டான வழிவகை ஆகும். இத்தகைய மனிதன் கிடைக்கப் பெறாத ஒரு அற்புத மாணாக்கன் ஆவான்.

❖ ஒரு குருவோ ஒரு பேராசிரியரோ நடைமுறையில் ஓடுகின்ற ஒரு பெருக்காறு ஆகும். ஆறு ஓடிக் கொண்டே இருப்பதைப் போல நீ எல்லா இடத்திற்குமாகத் திரி. பார்ப்பவைகளில் இருந்து உணருபவனைப் போன்று, அறிவைப் பெறு. இத்தகைய மனிதனிடம் இருந்தே அன்பு என்பது பிறக்கின்றது.

❖ மிகவும் நெருக்கமாக இருந்து கொண்டு இருக்கின்றவர்களைப் போன்று ஒரு வர்ணம் தீட்டுகின்ற தொழிலாளியும் அவனது கை புருசும் இருக்கிறது. எப்பொழுதும் தயார் நிலையில் இருக்கின்ற ஒரு வேலைக்காரனைப் போன்றதே ஒரு வர்ணம் தீட்டுகின்ற புருசு. இதுபோல நீயும் கடவுளும் உடனடி வெற்றிக்கு தயார் நிலையில் இருக்கிறீர்கள்.

❖ ஒரு வர்ணம் தீட்டுகின்ற தொழிலாளி கை புருசுவி துாரி கையினால் வர்ணம் தீட்டிய பின்பே ஒரு தொழிலாளி என்கிற பெயரினைப் பெறுகிறான். அதுபோல நீ வேலை செய்ய ஆரம்பித்த உடன் கடவுளும் சர்வ வல்லமையும் உன்னை எப்பொழுதும் ஆசீர் வதிக்கின்றன.

❖ எத்தகைய வேலையும் எப்பொழுதும் உலகத்தின் பாராட்டுக ளைத் தன்னிடம் கொண்டிருக்கின்றது. அதனால் உடனடி உனது வேலைகளுக்கு மதிப்பு கொடு. வேலை செய்து அமைதியைப் பெறு.

❖ எல்லா மக்களுமே தொழிலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே. மனித சமுதாயத்தில் வர்க்கபேதமும் பாகுபாடும் இல்லை. ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அவரவர்களது எண்ணப்படியே வேலை செய் கிறார்கள்.



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

# அமாவாசையில் இவற்றை செய்யலாமா?

## அமாவாசை அன்று வீட்டில் கோலம் போடலாமா?

- அமாவாசை அன்று வீட்டில் கோலம் போடக் கூடாது.
- அமாவாசை மற்றும் சிராா்த்த தினங்களில் நம் குடும்பத்தில் இறந்த முன்னோா்களின் ஆன்மாக்கள் வீட்டிற்கு வரும்.
- அவ்விதம் வரும் ஆன்மாக்கள் வாசலில் கோலம் இருப்பின் உள்ளே வர இயலாது.
- பெரியோா்களின் ஆன்மாக்கள் பித்ரு பூஜை நாட்களில் வீடுகளுக்கு வந்து நம்மை ஆசிா்வசிப்பது நல்லது.

## அமாவாசை அன்று புதிய வாகனம் வாங்கலாமா?

- அமாவாசை அன்று புதிய வாக னம் வாங்கக்கூடாது.
- புதிய வாகனம் வாங்கினால் மேற்கொண்டு புதிய வாகனம் வாங்கும் வாய்ப்பு கிடைக்காது.

## அமாவாசை தா்ப்பணம் என்பது தாயாருக்கா அல்லது தந்தையாருக்கா?

- அமாவாசை தா்ப்பணம் என்பது தந்தைக்கு மட்டுமே.
- தாய்க்கு ஈமக்கிரியை செய்தால் வருடாந்திர சிராா்த்தம் செய்யலாம்.

## அமாவாசைக்கு மறுநாள் புதிய வேலையில் சேரலாமா?

- அமாவாசைக்கு அடுத்து வரும் நாளை தவிா்த்து மற்ற நாட்களில் புதிய வேலையில் சேரலாம்.



## அமாவாசை அன்று நகைகள் வாங்கலாமா?

- அமாவாசையை விடுத்து மற்ற சுப திதிகளில் நகைகள் வாங்கலாம்.

## அமாவாசை அன்று எந்த காாியங்களை செய்யலாம்?

- அமாவாசை அன்று குலதெய்வ வழிபாடு செய்யலாம்.
- அமாவாசை பித்ருக்களை வழிபட உகந்த நாள்.

## அமாவாசை தினத்தில், இராகு காலத்தில் வியாபாரத்தை தொடங்கலாமா?

- அமாவாசை தினத்தில், இராகு காலத்தில் வியாபாரத்தை தொடங்க வேண்டாம்.

## வீட்டில் நிச்சயம் செய்த பின் முன்னோா்களுக்கு வருட திதி, அமாவாசை தா்ப்பணம் செய்யலாமா?

- வீட்டில் நிச்சயம் செய்த பின் முன்னோா்களுக்கு வருட திதி மற்றும் அமாவாசை தா்ப்பணம் செய்யலாம்.
- முன்னோா்களுக்கு தா்ப்பணம் செய்வதன் மூலம் அவா்களின் ஆசிகளைப் பெறமுடியும்.
- பித்ருக்களின் ஆசிா்வாதம் இருப்பின் நல்ல இல்லற வாழ்வும், தொழிலில் மேன்மையும் உண்டாகும்.

## சுப நிகழ்ச்சிகளை அமாவாசை அன்று துவங்கலாமா?

- சுப நிகழ்ச்சிகளுக்கு அமாவாசை ஏற்ற நாள் அல்ல.
- அமாவாசை பித்ரு தா்ப்பணம் மற்றும் முன்னோா்களின் வழிபாட்டிற்கு சிறந்தது.
- அமாவாசையில் குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்ள லாம்.
- வேள்விகள், தான தா்மங்களை செய்யலாம்.

# விவசாயத்தை செழிக்கவைக்கும் வராகிதேவிக்குரிய ஆடிமாத நவராத்திரி

ஒவ்வொரு வருடமும் அம்பாளுக்கு நான்கு வித நவராத்திரியை கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு நவராத்திரிக்கும் ஒவ்வொரு தேவி முதன்மை தெய்வமாக விளங்குகிறாள்.

- ஆனி அல்லது ஆடி மாதம் அமாவாசைக்கு பின் வரும் 9 நாட்கள் ஆஷாட, வாராகி நவராத்திரி (ஆகஸ்ட் 1 முதல் ஆகஸ்ட் 10 வரை)
- புரட்டாசி மாதம் அமாவாசைக்கு பின் வரும் 9 நாட்கள் சாரதா நவராத்திரி
- தை மாதம் அமாவாசைக்கு பின் வரும் 9 நாட்கள் ஸ்ரீ ராஜமாதங்கி நவராத்திரி.
- பங்குனி மாதம் அமாவாசைக்கு பின் வரும் 9 நாட்கள் ஸ்ரீலலிதா மஹா நவராத்திரி எனவும் அழைக்கப்படுகின்றன.

தற்போது ஆடி மாதம் நடைபெறுவதால் இம்மா தத்திற்கு அன்னை வராகிக்கு உரிய நவராத்திரி நடைபெறுகிறது. ஆடி மாதம், வளமையையும், செழு மையையும், மகிழ்ச்சியையும் தரவல்ல காலம் என்பது விவசாயத்தின் ஆரம்பக் காலமும், நிறைவுக் காலமும் தான்.

ஆஷாட நவராத்திரி காலம் என்பது ஆனி, ஆடி, ஆஷாட மாதம் தொடங்குகின்ற அமா வாசை முதல் நவமி வரையிலான காலமாகும்.

ஆனிஆடி மாதங்களில் புதுப் புனலாக ஆறு களில் தண்ணீர் பெருக்கெடுக்கின்ற காலம்.

பூமித் தாயே சூல் கொண்டு, பயிர்கள் அனைத் தையும் கருக் கொள்கின்ற காலம்.

விவசாயம் செழிக்க வளம் பெருக அம்பிகையை வழிபடக்கூடிய காலம் ஆனி அல்லது ஆடி மாதம் அமா வாசை முதல் 10 நாட்கள். மாலை, பலன் தரும்.



இந்த காலத்தில் அம்பிகையை, விவசாயம் பெருகி உலகம் சுபிக்ஷமாக விளங்க மனமுருக பிரார்த்தனை செய்தும் வாராகிக்கு பிரியமான மஞ்சள் மாலை,தேங்காய் நெய்தீபம், செவ்வரளி அர்ச்சனை. பஞ்சமி திதி விசேஷம். கருப்பு உளுந்துவடை, சக்கரை வள்ளி படைதந்து வழிபாடு. துஷ்ட நிக்ரகம், நற்காரியதடை, பூமி சார்ந்த நன்மைதந்து தர்மத்தை காப்பவள்.

பொதுவாக ஆஷாட நவராத்திரி தானிய அபி விருத்திக்காக செய்யப்படுவது.

தமிழகத்தில், தானியக் களஞ்சியமாக விளங்குகின்ற தஞ்சை மாநகரத்தில் ஆதி வாராகி அமைந்திருக்கக் கூடிய பிரகதீஸ்வர் கோயிலிலும் ஆஷாட நவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

ஆஷாட நவராத்திரி வாராஹி தேவிக்கு உரியதாக சாக்தசாஸ்திரங்கள் தெரிவிக்கின்றன. வாராஹி தேவியின் ரூப த்யான ஸ்லோகம், அம்பிகையின் கரங்களில் விவசாயத்திற்கு ஏற்ற ஏர்க் கருவியும், உலக்கையும் கொண்டு அருள்வதாகக் கூறுகின்றது வாராஹி தேவிக்கு ஆஷாட நவராத்திரி விவசாய வளமைக்காக கொண்டாடப்படுகின்றது.

வராஹி தேவி, தேவீ புராணங்களின் படி ஸப்த மாதர்களில் ஒருவராகவும், வராஹ புராணத்திலும், ஸ்ரீ நகர உபாஸனையிலும் அஷ்டமாத்ருகா தேவதைகளில் ஒருவராகவும் வணங்கப்படுகின்ற தெய்வம்.

வார்த்தாளி என்று அழைக்கப்படக்கூடிய வராஹி, ஸ்ரீ லலிதா மஹா திரிபுரசுந்தரி யின் படைத்தலைவி, அளப்பரியா சக்தி கொண்டவள். வேண்டுவோருக்கு வேண்டுவன வற்றை உடனடியாக அருளுபவள்.

**வாழ்வில் ஏற்படக்கூடிய எதிர்ப்பு களை நீக்குபவள். விவசாயம் சம்பந்த மான தொழில்களில் லாபம் பெருக அருள் புரிபவள். வீடு, நிலம், பூமி தொழில் சம்பந்தமான விஷயங்களில் வெற்றிகளை அருளுபவள். இல்லம் எனும் வீட்டில் என்றும் தானியங்கள் நிறைந்திருக்கச் செய்பவள். மிக விரைவில் பலன் அளிக்கக் கூடிய வள்.**

ஆஷாட நவராத்திரியின் ஒவ்வொரு நாளிலும், ஸப்த மாதா தெய்வங்களையும், அஷ்ட மாத்ருகா தெய்வங்களையும், வழிபாடு செய்வதும், ஐந்து – எட்டாம் நாளில் வராஹி தேவியைப் போற்றுவதும் வளமான வாழ்க் கையை நல்கும்.

# சிவதீக்ஷை பெறாத கண்ணனும் நிர்மால்யம் அடையாத புஷ்பமும்



ஒருமுறை ஸ்ரீ உபமன்யு முனிவர் வனத்தின் நடுவே தம் சிவபூஜைக்காக சிஷ்யர்களை பூ பறித்துவர சொல்ல, பூஜைக்கு உகந்த புஷ்பம் அவ்விடத்தில் தேடியும் கிடைக்கவில்லை என சீடர்கள் கூறினர்.

உடனே உபமன்யு முனிவர் தம் சீடர்களை நோக்கி ஸ்ரீ கிருஷ்ணன் யமுனை நதியிலே பூசை செய்து விட்ட புஷ்பம் உள்ளது அதை எடுத்து வாருங்கள் என கூறினார்.

குருவின் கட்டளைக்கினங்க, சீடர்களும் யமுனை நதி சென்று கிருஷ்ணர் பூஜை செய்து விட்ட புஷ்பங்களை சேகரிக்கத்துவங்கினர்.

இதைப் பார்த்த கிருஷ்ணன் "இப்பூக்கள் நிர்மால்யம் ஆயிற்றே, இவற்றை எடுக்காதீர்கள்" எனக் கூறினார்.

சீடர்கள் "எங்களுக்கு தெரியாது, குருநாதர் எடுத்துவர கூறினார்" என நடந்தவற்றை கூறினர்.

உடனே கிருஷ்ணன் உபமன்யு முனிவரை அடைந்து வணங்கி, "இந்த பூக்கள் நான் பூஜை செய்தது, இப்பூக்கள் நிர்மால்யமாயிற்றே, இதை தங்கள் பூஜைக்கு எப்படி பயன்படுத்துவீர்கள்" என்று கேட்டார்.

உடனே உபமன்யுமுனிவர் கிருஷ்ணரை பார்த்து, "சிவதீக்ஷை பெற்றுள்ளீரா" என கேட்க, அதற்க்கு கண்ணன் "இல்லை" என பதில் அளித்தார்.

"சிவாமவிதிப்படி சிவதீக்ஷை பெற்று சிவபரம்பொருளுக்கு செய்யும் பூஜயே இறைவனை அடையும், அதுவே நிர்மால்யம் ஆகும், சிவதீக்ஷை இன்றி செய்த தங்களது பூஜைக்கு பயன்படுத்திய புஷ்பம் நிர்மால்யம் ஆகாது" என உரைத்தார்.

உடனே கிருஷ்ணர் உபமன்யுமுனிவரிடமே சிவதீக்ஷை பெற்று சிவாகம விதிப்படியான பூஜையை மேற்க்கொண்டார்.

இதனை,

"தீக்கையின்றிப் பூஜைசெய்தால் பயனொன்றில்லை,
தெரியாமல் கண்ணனும் செய்து வந்தான்,
ஊக்கமுடன் அவனுக்கு உபதேசித்து
உறுதியுள்ள சிவலிங்கம் தந்து காத்த
பாக்கியவான் உபமன்யு தன்னைப் பெற்ற,
பலசாலி புலிமுனியின் பாதம் போற்றி,
ஆக்கமுள்ள பதஞ்சலியின் பாதம் போற்றி,
அரனருளை எளிதாக அடையளாமே."

என்ற பாடல் மூலம் அறியலாம்.






அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஒர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

www.aanmeegamalar.com

# காயத்ரி மந்திரத்தின் 24 தத்துவங்களை உணர்த்தும் காஞ்சி அத்திவரதர்


நின்ற கோலத்தில் அத்திவரதர்

இன்று உலக மக்களால் பேசப்படுகின்ற ஹாட் டாப்பிக் என்றால் அது அத்திவரதர் தான். காஞ்சிபுரத்தில் மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றுமே சிறப்புடையதாகும். இந்திய நாட்டின் நூற்றெட்டுத் திருப்பதிகளில் முக்கியப் பதிகளாக உள்ள நான்கினில் ஒன்றாக விளங்குவது தான் வரதராஜப் பெருமாள் கோயில். முக்தி தரும் ஏழு புண்ணிய திருத்தலங்களில் காஞ்சியும் ஒன்று. காஞ்சிபுரம் என்றாலே முதலில் நம் நினைவுக்கு வருவது காமாட்சி அம்மன் தான். இந்த காமாட்சி அம்மனை வணங்கினால் முப்பெரும் தேவியரை ஒருசேர வணங்கிய பலன் நமக்குக் கிடைக்கும்.

அத்தி மரத்தினாலேயே ஆனவர் என்பதால், பெருமாளுக்கு அத்தி வரதர் என்று பெயர் வந்தது. காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாளுக்குப் பல பெருமைகள் உண்டு. தமிழ்நாட்டிலேயே ஏன் இந்தியாவிலேயே எந்த ஒரு கோயிலிலும் இல்லாத பல சிறப்பு அம்சங்கள் இந்த கோயிலில் உள்ளன. அப்படிப்பட்ட பழங்கால புராதன பெருமை வாய்ந்த இந்தக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அத்திவரதரை தரிசனம் செய்ய நாம் நிச்சயம் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

பிரம்மா செய்த யாகத்திலிருந்து வந்ததாகவும், மூலவராக இருந்து மறைக்கப்பட்டவர் என்றும் அத்தி வரதர் குளத்தில் எழுந்தருளியதைப் பற்றி பலவாறு கூறப்பட்டு வந்தாலும், அவரின் திருவுருவம் முழுவதும் அத்தி மரத்தால் ஆனது. பொதுவாக அத்திமரக் கட்டைக்குப் பல விஷேசங்கள் உண்டு. புவி ஈர்ப்பு விசையை தடுத்து நிறுத்தக்கூடிய ஆற்றல் கொண்டது. எளிதில் பூமியில் ஈர்க்கப்படாது. மற்ற மரங்களை விட அத்திமரத்துக்கு தண்ணீரில் ஊற ஊற அதன் பளபளப்பு அதிகமாகும் என்பதால் தான் அத்திவரதர் கருங்கல்லில் செய்தது போன்று இன்றும் பொலிவுடன் காணப்படுகிறார்.

நம் எல்லோருக்கும் ஒரு சந்தேகம் இருக்கும்.. ஏன் அத்திவரதரை 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியே எடுக்கிறார்கள், ஏதாவது கணக்கு இருக்குமோ? இதற்கு முன்னதாக 48 ஆண்டுகளுக்கு ஒரு முறையும், 54 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் ஸ்வாமியை வெளியே எடுத்துள்ளனர். ஆனால், மனித வாழ்நாளில் ஒருமுறையேனும் இந்த பெருமாளைத் தரிசிக்கவேண்டும் என்று பக்தர்களின் கோரிக்கைக்கிணங்க, பெருமாளே தன்னை 40 வருடத்திற்கு ஒருமுறை வெளியே எடுத்து 48 நாட்கள் வழிபடப் பணித்துள்ளார்.

கோயிலின் மற்றொரு சிறப்பு என்றால் அது 24. ஏன் 24? குளத்திற்கு அடியில் உள்ள அத்தி வரதரைப் பார்க்க வேண்டுமென்றால் 24 படிகள் கீழிறங்கி தான் செல்ல வேண்டும். கோயில் மூலவர் வரதராஜரைப் பார்க்க வேண்டும் என்றால் 24 படிகள் மேலே ஏறித்தான் செல்ல வேண்டும். இந்த கோயில் 24 ஏக்கர் பரப்பளவில் 24 நிலைகளைக் கொண்டுள்ளது. இவை காயத்ரி மந்திரத்தின் 24 தத்துவங்களை உணர்த்துகின்றன.

இசை மும்மூர்த்திகளில் ஒருவரான ஸத்குரு தியாகராஜ சுவாமி, வேங்க ரங்கய்ய தாஸர், சென்னையை சேர்ந்த ஸ்ரீ நிவாஸ ராமாநுஜதாஸர் என பலர் அத்திகிரி பேரருளாளனை நாம சங்கீர்த்தனத்தால் சேவித்து அருள்பெற்ற மகான்கள்.

கடந்த 1979ல் மட்டும் நாடு எங்கிலும் இருந்து பல லட்சம் பக்தர்கள் அத்திவரதரை தரிசித்துள்ளனர். காஞ்சிபுரம் யாத்திரை ஸ்தலமாக விளங்குவதன் முக்கியத்துவத்தை மக்கள் அறிய காஞ்சிபுரம் தபால் நிலையத்தில் விசேஷ தபால் முத்திரை பொறிக்கப்பட்டது. சுமார் 6480 தபால் உரைகளில் இந்த விசேஷ முத்திரை பொறிக்கப்பட்டிருந்தது.

அத்திவரதர் எழுந்தருளியிருக்கும் நாட்களில் அஸ்தம், திருவோணம், ரோகிணி நட்சத்திரக்காரர்கள், உங்கள் நட்சத்திரம் எப்பொழுது வருகிறதோ அதற்கு ஏற்ப வழிபாடு செய்வது


அத்திவரதரின் எழில்மிகு முகத்தோற்றம்


அத்திவரதரின் அபயக்கரம்







ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com


அத்திவரதரின் 1979-ம் வருட நின்றகோல தரிசனம்

மிகவும் நல்லது. அத்திகிரி வரதர் அஸ்த நட்சத்திரத்தில் அவதரித்தவர் என்பதால் அஸ்த நட்சத்திரக்காரர்கள் ஜென்ம நட்சத்திரம் எப்போது வருகிறதோ அன்றைய தினம் அத்திவரதரை வழிபட்டால் வாழ்வில் அனைத்து வெற்றியையும் அடைவர். மகாவிஷ்ணு வுக்கு மிகவும் உகந்த திருவோணம் மற்றும் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் அவர்களுடைய நட்சத் திர தினத்தில் அத்திவரதரை வழிபட்டால் சகல சௌபாக்கியங் களையும் அடையலாம்.

பரத்வாஜ முனிவரின் அறிவுரைப்படி பிரகஸ்பதி இங்கு வந்த பெருமாளை வழிபட்டு சாப விமோசனம் பெற்ற திருத் தலமாக இது உள்ளது. எனவே, இங்கு வந்து வழிபட்டால் குரு பகவானால் ஏற்பட்ட தோஷங்கள் அகலும் என்பது ஐதீகம்.

அத்திவரதர் இதற்கு முன்னதாக 1854, 1892, 1937, 1979 ஆகிய ஆண்டுகளில் வெளியே வந்து எழுந்தருளினார். தற்போது 2019ம் ஆண்டில் நமக்குக் காட்சி கொடுக்கும் அத்திவரதர், அடுத்து, 2059ல் தான் பக்தர்களுக்குக் காட்சியளிப்பார்.

ஒவ்வொருவரும் அவரது ஆயுள்காலத்திற்குள் ஒருமுறை, தவறினால் இருமுறைதான் இந்த பெருமாளைத் தரிசிக்க முடியும். ஆனால் மூன்று முறை தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்களும் இருக்கிறார்கள். அந்த வகையில் 3 முறை தரிசிக்கும் பேறு பெற்ற சென்னையைச் சேர்ந்த ஏ.எம் ராஜகோபாலன் கூறுகையில், இதற்கு முன்பு 1937, 1979ம் ஆண்டுகளில் தரிசனம் செய்தேன். தற்போது மூன்றாவது முறையாக அத்திகிரி அருளாளனை தரிசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது. அவரைத் தரிசித்த போதுதான் விஸ்வகர்மாவைத் தவிர இதுபோல பகவானின் திருமேனியை வடிக்க யாராலும் இயலாது என்று பிரமித்துப் போனேன்.. என்றார்.

மிகவும் தொன்மையான இந்த அத்தி வரதர் உற்சவத்தில், திருவிழா வழிபாட்டுடன் சேர்த்து மொத்தம் 48 நாள்களுக்கு அத்தி வரதரை கண்குளிரத் தரிசனம் செய்யலாம்.

## இத்தலத்தின் சிறப்புகள்

- உற்சவருக்கு, “அழைத்து வாழ வைத்த பெருமாள்’ என்ற வித்தியாசமான பெயர் இருக்கிறது.
- கீதையில் கிருஷ்ண பகவான், தனது வடிவமாகக் குறிப்பிட்ட அரச மரமே இத்தலத்தின் விருட்சம். மரத்தின் எதிரே கரியமாணிக்க வரதர் சன்னதி உள்ளது. புத்திரதோஷம் உள்ளவர்கள் அமாவாசையுடன், திங்கள்கிழமை சேர்ந்த நாளில் மரத்தையும், சன்னதியையும் சுற்றிவந்து வழிபடுகிறார்கள்.
- வைகாசி பிரம்மோற்ஸவம், ஆனி சுவாதி மற்றும் ஆடி கஜேந்திர மோட்ச நாட்களில் சுவாமி கருடசேவை காண்கிறார்.
- ராமானுஜருக்காக கண்களை இழந்த கூரத்தாழ்வார், பார்வை பெற்ற தலம் என்பதால், கண் நோய் நீங்க இங்கு வேண்டிக்கொள்கின்றனர்.
- காயத்ரி மந்திரத்தின் 24 அட்சரங்களைக் குறிக்கும் விதமாக மூலஸ்தான படிகள், மதிலில் பதிக்கப்பட்ட கற்கள், தீர்த்தக்கரை படிகள் ஆகியவை 24 என்ற எண்ணிக்கையில் அமைந்துள்ளன

## அத்தி மரத்தால் ஆன சிலைகள் உள்ள மற்ற தலங்கள்

- திருவொற்றியூர், திருக்கானாட்டு முள்ளூர் ஆகிய திருக்கோயில்களில் இரண்டாவது தலவிருட்ச மாக அத்திமரம் வணங்கப்படுகிறது.
- காஞ்சிபுரம் அத்தி வரதரைப் போல உடுப்பி கிருஷ்ணன் சிலை அத்தி மரத்தில் செய்யப்பட்டது.
- திருமலையில் தலதீர்த்தமாகிய குளத்திலும் அத்தி வரதர் எழுந்தருளியுள்ளார்.
- வானமுட்டிப் பெருமாள் ஆலயம் மயிலாடுதுறை அருகே சுமார் 5 கி.மீ. தூரத்தில் கோழி குத்தி என்ற சிறு கிராமத்தில் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் மூலவர் அத்தி மரத்தைக் கொண்டு சிலையாக வடிக்கப்பட்டுள்ளது. பெருமாள் விஸ்வரூபமாக இருந்ததால் வானமுட்டிப் பெருமாள் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளதாம்.


அத்திவரதரின் 2019-ம் வருட சயனகோல தரிசனம்.


அத்திவரதரின் 2019-ம் வருட நின்றகோல தரிசனம்

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# ஆன்மிகமலர்
## மெயில் புக்




மாதம் தோறும் இரண்டு இதழ்களாக
(இ-புக் வடிவில்) வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் நீங்களும்
இணைந்து ஆன்மிக சேவையாற்றலாம்....

உங்கள் பகுதியில் உள்ள கோயில்களின் சிறப்புகள்,
மகான்களின் சிறப்புகள், மற்றும் உங்களுக்கு தெரிந்த
ஆன்மிக செய்திகளையும் எங்களுடன் பகிருங்கள்...

30ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்கள்
படித்து பயன்பெற ஒரு பாலமாக இருப்போம்

மேலும் தகவலுக்கு 8825844033 என்ற
வாட்சப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்